அளித்திருக்கிறது. மற்ற இரு பத்திரிகைகளும் அவகாசம் கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே, 20—7—1977 வரை அவற்றுக்கு அவகாசம் கொடுத்துவிட்டு, இவற்றின் மீது எனது தீர்ப்பை அடுத்த கூட்டத் தொடரில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய அவை உரிமை மீறல் தீர்மானத்தின் மீதும் எனது தீர்ப்பை அடுத்த கூட்டத் தொடரில் அறிவிக்கிறேன்.

(3) அரசினர் தீர்மானம்.

பேரவை விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"சட்டமன்றப் பேரவையின் 244-வது விதியின் கீழ் 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(4) கவன ஈர்ப்பு

(அ) மூன்றாவது ஊதியக்குழு அமைப்பது குறித்து

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ்—

"மூன்றாவது ஊதியக் குழு அமைப்பதாக தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றாவிடில் நேரடி நடவடிக்கையாக மீண்டும் கிளர்ச்சியைத் தொடங்கப் போவதாக அரசு ஊழியர்கள் கொடுத்துள்ள இறுதி எச்சரிக்கையின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து" என்ற

அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

1977 ஜூலை 15]

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : மாநில சட்டமன்றப் பேரவைக்கான தேர்தல்களுக்கு முன்னர் அரசிதழ் பதிவு பெருத அரசுப் பணியாளர்கள் சங்கம், தமிழ் நாடு தலைமைச் செயலகப் பணியாளர்கள் சங்கம் முதலியன தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கிளர்ச்சி ஒன்றை நடத்தின.

அரசுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படத்தக்க ஊதிய வீதம், ஏனைய படிகள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பதற்கு மூன்ருவது ஊதியக் ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கைகளில் முக்கியமான கோரிக்கையாகும். தமிழ்நாடு ஆளுநர் அவர்களும், மேற்படி சங்கங்களின் பிரதிநிதிகளும் இதுபற்றி விவாதித்தனர். ஊதிய ஆணைக்குழுவின் நியமனம் பற்றி அறிவிக்க அரசு முடிவு செய்தது.

அவ்வண்ணமே, தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பணியாளர்களுக்காக ஊதிய ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது குறித்து தங்களது முடிவை, அரசு, நிதித்துறையின் (ஊதியப் பிரிவு) 17—6—1977 ஆம் நாளிட்ட 555 ஆம் எண் அரசு ஆணையில் வெளியிட்டது.

அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும், உள்ளாட்சி மன்றங்கள், மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்கள், ஆசிரியரல்லா ஏனைய பணியாளர்கள் உட்பட உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள் அனைவருக்கும் 1—7—1977 ஆம் நாள் முதற்கொண்டு, அதாவது 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொடுக்கப்படத்தக்க ஊதியத்தில் மாதமொன்றுக்கு 10 ரூபாய் இடைக்கால நிவாரணமும் அரசு அளித்தது.

ஊதிய ஆணைக்குழுவின் அமைப்பும் செயல்வரம்பும் நாளடைவில் இறுதியாக முடிவு செய்யப்பட்டு தக்க நேரத்தில் அறிவிக்கப்படும்.